**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF, ATTUR**

**O.S. No. 99/2004**

Deposition of **DW.2** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tr. G. Mahavishnu, Gr. III Bench Clerk of this court, on 13.02.2026 in accordance with the provision of Act 1 of 1873.

Name : ராஜீ Father's Name :

துவக்க நேரம்: 01.18 P.M.

சாட்சி முன்னிலையானார் உறுதிமொழி செய்து வைக்கப்பட்டார்.

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

1. தாவா சொத்தின் பட்டா எண், சர்வே எண், விஸ்தீரணம் ஆகியவைகள் தெரியுமா என்றால தெரியாது. வாதி, பிரதிவாதிகள் நிலங்களின் நான்கு எல்லைகள் தெரியுமா என்றால் தெரியாது. அதேபோல் தாவா சொத்தின் நான்கு எல்லைகள் தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்திற்கு நான் சென்றுள்ளேனா என்றாலும் அங்கு பொது கிணறு உள்ளது என்றாலும் சரிதான். அந்த கிணற்றிற்கு தென்புறமும், வடபுறமும் இரண்டு கவளைபாதைகள் உள்ளதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

2. தாவா சொத்திற்கு அருகில் 2-ம் பிரதிவாதிக்கு எத்தனை வயல்கள் இருந்தது என்றால் எனக்கு தெரியாது. எனது வீட்டிலிருந்து தாவா சொத்து அமைந்துள்ள இடம் 2 கி.மீ தூரம் இருக்கும் என்றால் அதற்குமேல் இருக்கும். தாவா சொத்திற்கு அருகில் எனக்கு நிலம் இல்லை என்றால் சரிதான். வாதி, பிரதிவாதிகளின் நிலங்களுக்கு இடையில் கற்களால் கட்டப்பட்ட வரப்பு உள்ளதா என்றால் உள்ளது. மேற்படி வரப்பிற்கு தென்புறத்தில் யார் நிலம் உள்ளது என்றால் பொன்னுசாமி மற்றும் மெய்யப்பகவுண்டர் நிலம் உள்ளது, பொன்னுசாமிக்கு மேற்படி வரப்பிற்கு மேற்கு பக்கத்திலும் நிலம் உள்ளது.

3. நான் சொல்வது தவறு என்றாலும் பொன்னுசாமி கவுண்டருக்கு வரப்பிற்க்கு மேற்கு புறத்தில் நிலம் இல்லை என்றால் சரியல்ல. மேற்படி வரப்பிற்கு வடபகுதியில் சிவகாமியம்மாள் மற்றும் அவரது வாரிசுகளின் நிலம் உள்ளது என்றால் சரிதான். எனது நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள விடுதலைபத்திரத்தில் நான் சாட்சி கையெழுத்து போட்டுள்ளேனா என்றால் இல்லை. அதில் எழுதப்பட்டுள்ள சர்வே எண், விஸ்தீரணம் பற்றிய விவரங்கள் தெரியுமா என்றால் தெரியாது.

4. மேற்படி வரப்பிற்கு வடபுறம் சிவகாமியம்மாளும், தென்புறம் மெய்யப்பகவுண்டர் மற்றும் பொன்னுசாமி கவுண்டரும் கடந்த 1933 ம் ஆண்டிலிருந்து அனுபவத்தில் இருந்து வருகிறார்கள் என்றாலும் தாவா சொத்தை பற்றிய விவரம் தெரியாமல் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கான வருவாய் ஆவணங்கள் பற்றிய விவரம் தெரியுமா என்றால் தெரியாது. 2-ம் பிரதிவாதி எனது உறவினர் என்பதால் நான் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

முடிவு நேரம்: 01.32 P.M.

Taken down before / by me in open court and read over / interpreted to the witness and acknowledged by him /her to be correct

Sd/- D. Jansi Rani,
Principal District Munsif (FAC), Attur.

Typed by Selvi. C. Sasikala - O.S. No.99/2004, Dt.13.02.2026.